2006 டிசம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்புகள்

(அ) திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2006) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)–தொடர்ச்சி

(உ) திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2006), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS